# <u>கம்பம் நகராட்சி</u>

**2019–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (31.12.2019) ஆம் நாள் செவ்வாய் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## <u>கூட்டப் பொருட்கள்</u>

**1.** நகராட்சி ஆணையாளர் அவர்களின் 12/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** நகராட்சி பொறியாளர் அவர்களின் 12/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**3.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1886, நாள். 29.11.2019 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் பணிகள் மேற்கொள்ள 18.12.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | வாரசந்தை மெயின்ரோடு வடக்கு பக்கம் Bay-2 & Bay-3 கான்கிரீட் தளம் அமைக்கும் பணி | 5,00,000/– | கே.சி. போஸ் | – | 0.17 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.21 | – |

**<u>அலுவலகக் குறிப்பு</u> : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ் , ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.17 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1886, நாள். 29.11.2019 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் பணிகள் மேற்கொள்ள 18.12.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | வாரசந்தை மெயின்ரோடு வடக்கு பக்கம் Bay-4 கான்கிரீட் தளம் அமைக்கும் பணி | 3,00,000/– | கே.சி. போஸ் | – | 0.16 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.19 | – |

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ் , ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.16 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1886, நாள். 29.11.2019 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் பணிகள் மேற்கொள்ள 18.12.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூ.** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.** | **கூடுதல் %** | **குறைவு %** |
|---|---|---|---|---|---|
| 1 | வாரசந்தை பகுதியில் தெருவிளக்கு வசதி ஏற்படுத்தும் பணி | 4,00,000/– | கே.எம்.பி.எல். எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | 1.15 | |
| | | | எல். ராஜேந்திரன் | | 0.26 |

**அலுவலகக் குறிப்பு :–** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. எல். ராஜேந்திரன் , ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.26 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் 2018–19 –ன் கீழ் ரூ. 410.00 இலட்சம் மதிப்பீட்டில் கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம் – குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் இடத்தில் கசடு கழிவு சுத்திகரிப்புநிலையம் (FSTP) அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 26888/UGSS-2/2018–32, நாள். 29.01.2019 உத்திரவின்படி நிர்வாக அனுமதி வழங்கிய மேற்கண்ட பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் வெளியீட்டு ஆணை எண்.1505/ஒப்பந்தபுள்ளி/2019, நாள்.05.03.2019 வழியாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ. 98,175/–ஐ (ரூபாய் தொன்னூற்று எட்டாயிரத்து நூற்று எழுபத்து ஐந்து மட்டும் ) அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்ஸி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1699/2018/இ1)

**7.** தமிழ்நாடு சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 04, ஓடைக்கரையில் (அமராவதி தியேட்டர் அருகில்) உள்ள பழுதான பாலத்தினை உடைத்து புதிய பாலம் அமைக்கும் பணி நடைபெறவுள்ளதால் மேற்கண்ட இடத்தில் மண்ணின் உறுதி தன்மை அறியும் பொருட்டு மண்பரிசோதனை செய்து உரிய சான்று வழங்க கோரியுள்ளதன்பேரில், முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, போடிநாயக்கனூர் அவர்களின் கடிதம் GCE/PCE/SOIL/2019/73C நாள். 27.112019ன் படி ஆய்வு கட்டணம் ரூ. 21,240/– (சேவை வரி உட்பட) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி மேற்கண்ட தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்துவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2649/2018/இ1)

| | |
|---|---|
| 8. | இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் 2340 தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது நகரில் பல்வேறு இடங்களில் விரிவாக்க பகுதிகளில் தெருவிளக்கு வசதி இல்லாத தெருக்களில் புதிய தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தருமாறு பொதுமக்களிடமிருந்து வரப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் பல்வேறு அத்தியாவசியமான 70 இடங்களில் 30 வாட் திறன் உள்ள LED விளக்குகள் மின்வாரிய உதவியோடு நிறுவிட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. **4.95** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** பொதுமக்களின் அடிப்படை வசதி என்பதால் மேற்படி பணிக்கான செலவினத்தை 2019–2020 பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 9. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள் .739/1பி2, எ/2பி, 740/2எ– இல் வார்டு டி பிளாக் – 25, நகரளவு எண் 13 மற்றும் வார்டு– டி, பிளாக் – 25, நகரளவு எண்.14 – இல் கட்டப்பட்டுள்ள இடம் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் வழங்கப்பட்ட இலவச குடியிருப்பு மனைப்பிரிவு ஆகும். மேற்படி பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையின் படி, அவ்வப்போது அடிப்படை வசதிகளான சாலைப்பணிகள் மற்றும் சுகாதாரப்பணிகள் இந்நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனை எண்.124 முதல் ஆங்கூர்பாளையம் சாலையினை இணைக்கும் சாலை வரையுள்ள மனை எண். 122– இன் முன்புறம் (வடக்குப்பக்கம்) உள்ள மனை எண்.191 என குறிப்பிட்டுள்ள இடத்தின் உரிமையாளரான திருமதி. சகுந்தலா என்பவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பட்டா மனையிடத்தில் சாலை அமைவதாக கூறி சாலைப்பணிகளை மேற்கொள்வதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். WP (MD) No. 23848/2019 என்ற வழக்கில் எதிர்வாதிகளாக 1) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், 2) தனிவட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலத்துறை, தேனி. 3) ஆணையாளர், கம்பம் நகராட்சி ஆகியோரை சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை ஆணையாளர் சார்பாக திரு.ஹேமா கார்த்திகேயன் வழக்கறிஞரை வழக்கை நடத்தி தருமாறும், மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– ( ரூபாய் பத்தாயிரம் மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : – மன்றம் அனுமதிக்கலாம். |
| 10. | அரசாணை எண்:238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை (மாநி 4) நாள்:01.10.1997–ல் அரசுத்துறைகளில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துக்கள் ஏதுமின்றி பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண் ந.க.எண்: 4980/2018/ஜே3, நாள் 10.05.2019 ல் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர்கள் திரு.மா.செல்வராஜு மற்றும் திரு. எல். மணிகண்டன் ஆகிய இருவருக்கும் 30.11.2017 தேதியுடன் 20 ஆண்டுகள் மாசற்ற பணிப்புரிந்தமைக்கான தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கவும் மேற்படி தங்கப்பதக்கத்தினை தமிழ்நாடு கைவினை தொழிலாளர் வளர்ச்சி இயக்குநரகத்தில் விலைப்பட்டியல் பெற்று, பதக்கம் பெற்று வழங்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. தங்கப்பதக்கம் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/ க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 433/2018/சி1) |

**11.** கம்பம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 30.03.2020 உடன் குத்தகை உரிமக்காலம் முடிவடைவதால் 2020–21 முதல் 2021–22 வரையிலான மூன்றாண்டு காலங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளதால், இதற்கான திருத்திய பொது நிபந்தனைகள், ஏலப்பொறுப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகைக்கும், பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ. எண் | இனம் | ஏலப்பொறுப்பு தொகை ரூபாயில் | கூடுதல் வைப்புத் தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | கம்பம் மெட்டுச் சாலையிலுள்ள நகராட்சி நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,000/– | 1,00,000/– |
| 2. | கம்பம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,000/– | 1,00,000/– |

**அலுவலகக் குறிப்பு : –**1) மேற்படி குத்தகை இனங்களுக்கு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி ஏல அறிவிப்பினை அச்சிடவும், செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக விளம்பரம் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 10000/- க்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3207/2017/பி2)

**12.** கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN. **60** Z **3591** கழிவுநீர் ஊர்திக்கு **10.01.2020** உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.**1,30,000/–** ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**1) தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
2) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3933/2019/எச்1)

**13.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு கிருமி நாசினியாகவும், டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கவும் பயன்படுத்தப்படும் ப்ளீச்சிங் பவுடர் 2019 – 20 ஆண்டிற்கு வாங்கி உபயோகப்படுத்துவதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 2,20,000/– க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1043/2019/எச்1)

**14.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் Hand Fogging Machine 10 எண்ணம் இருப்பில் உள்ளதில் 5 எண்ணம் உபயோகம் இல்லாமல் உள்ளது. தற்போது 2 மட்டும் உபயோகபடுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 3 எண்ணம் Hand Fogging Machine பழுது பணி செய்ய அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் தற்போது டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த ஏதுவாக Hand Fogging Machine – 5 எண்ணம் உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் வாங்குவதற்கு ஆகும் செலவினம் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் வாங்குவதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3726/2019/எச்1)

**15.** கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு. ப. மணி என்பவர் கொடைக்கானல் நகராட்சிக்கு பணி மாறுதல் கோரும் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3725/2019/எச்1)

**16.** கம்பம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணி செய்ய 135 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் அரசின் அனுமதி பெற்று பணிபுரிந்து வந்தனர். As per G.O ( MS) No. 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்.30.04.1997 இன் படி இந்நகராட்சி துப்புரவு பணிக்கு 242 துப்புரவு பணியாளர்கள் தேவை என்ற நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண் 22932/பி3/2017, நாள். 17.11.2017– இல் 107 பணியாளர்கள் தனியார் மூலம் Dis.No.28369/J3/2018 dated, 22.11.2018- இல் 67 பணியாளர்களை தனியார் மூலம் தற்காலிகமாக பணி அமர்த்திக் கொள்ளவும் உத்திரவு வரப்பெற்று பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும் அவ்வப்போது ஏற்படும் காலி பணியிடங்களுக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவில் “ The Municipal Commissioner also informed that if any vacancies arise in the post of sanitary worker under any circumstances in future, the labour as may be engaged on contract basis by outsourcing from the existing private service provider and such engagement should not exceed the sanctioned strength as per norms without prior permission from this office” என கூறப்பட்டுள்ளது தற்போது புதிதாக நந்தகோபால் சாமி நகரில் துவங்க உள்ள MCC- இல் பணிபுரிய துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுவதால், தற்போது ஏற்பட்டுள்ள 9 காலி பணியிடங்களுக்கு 9 துப்புரவு பணியாளர்களை ஏற்கனவே உள்ள தனியார் மூலம் முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்தி மாவட்ட ஆட்சியர் குறிப்பிட்டுள்ள ஊதிய செலவினம் ஒரு ஆண்டுக்கு ரூ. 12.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1308/2017/எச்1)

**17.** தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு கிருமி நாசினியாகவும், டெங்க காய்ச்சல் பரவுவதை தடுக்கவும் பயன்படுத்தப்படும் ப்ளீச்சிங் பவுடர் **2019–20** ஆம் ஆண்டிற்கு வாங்கி உபயோகப்படுத்துவதற்கு **23.12.2019**ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் (ரூ.) | |
|---|---|---|---|
| 1. | M/s. Bjaratjh Marketing Enterprises<br>No. 8 Aadaleasan Street,<br>Medical College Road,<br>Thanjavur – 613 004 | 25 Kg Bag 1Bag | 1410.00 |
| | | GST 18% | 254.00 |
| | | | 1664.00 |
| 2. | M/s. Global Traders,<br>2/225, Ist Floor,<br>P. Alagiya Singam Nagar,<br>Vamdiyur,<br>Madurai – 625 020 | 25 Kg Bag 1Bag | **1490**.00 |
| | | GST 18% | 268.00 |
| | | | 1758.00 |
| 3. | Jai Agencies,<br>1/853-11th Cross, Vayalur main road<br>Vasan nagar, Trichy. | 25 Kg Bag 1Bag | 1460.00 |
| | | GST 18% | 263.00 |
| | | | 1723.00 |

**அலுவலகக் குறிப்பு : – 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். **3–**இல் கண்டுள்ள நிறுவனத்தார் பொறுப்புத் தொகை செலுத்தவில்லை. எனவே, மீதமுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S, Bharath Marketing Enterpirses நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். **1043/2016**/எச்**1**)

**18.** கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் கொசு ஒழிப்புப் பணிக்கு பயன்படுத்தப்படும் Hand Fogging Machine 5 எண்ணம் புதியதாக வாங்குவதற்கு **27.12.2019–**ஆம் நாள் வரப்பெற்ற கீழ்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் (இயந்திரம் ஒன்றுக்கு) ரூ. | |
|---|---|---|---|
| 1. | உரிமையாளர்<br>N.R. Traders,<br>Coimbatore | கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் கருவி | 23000/– |
| | | GST 18% | 4140/– |
| | | | 27140/– |
| 2. | உரிமையாளர்<br>Amutha Agencies,<br>Coimbatore | கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் கருவி | 24500/– |
| | | GST 18% | 4410/– |
| | | | 28910/– |

**அலுவலகக் குறிப்பு : –** 1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் N.R. Traders, Coimbatore விலைப்புள்ளியை மன்றம் அனமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி, தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3726/2019/எச்1)

ஒப்பம்/– திருமதி. ரா. கமலா
ஆணையாளர்,
கம்பம் நகராட்சி.

நாள். 31.12. 2019
இடம். கம்பம்